**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----

**IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, VIRUDHUNAGAR**

Sessions .. .. Sessions Case No. 103 of 2021

Deposition of witness for { Prosecution PW6
Defence
Court

Name :நாகராஜ்
Father Name :மாரிச்சாமி
Village :**அல்லம்பட்டி**
Taluk :விருதுநகர்
Caste :
Calling :
Religion :
Age :62

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 09th day of March 2026.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை -**

1) நான் தற்போது அல்லம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் தற்போது மல்லி கிடங்கில் வேலை செய்து வருகிறேன். கடந்த 05.01.2013 ம் தேதி சுமார் 12.00 மணியளவில் பஜார் காவல்நிலைய போலிசார் வந்து என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். நான் கையெழுத்து போட்டேன். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சி மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்தில்உள்ள கையெழுத்து என்னுடையது தான். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையெழுத்து **அ.த.சா.ஆ.3** ஆகும். அத்தாட்சியில் உள்ள முதல் கையெழுத்து **அ.த.சா.ஆ.4** ஆகும். மேற்படி நான் கையெழுத்து போட்ட ஆவணங்களில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியாது. வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கோரி பிறழ் சாட்சியாக விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பு குறுக்கு விசாரணை )**

2) கடந்த 05.01.2013 ம் தேதி 11.15 மணிக்கு நான் வேலை பார்த்த அம்மன் தீப்பெட்டி ஆலைக்கு விருதுநகர் பஜார் காவல்நிலைய காவல் ஆய்வாளர் குற்ற எண்.6/2013 வழக்கில் எதிரி ரவிக்குமார் என்பவரை விசாரித்து அவர் தானாக

முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தார் என்றும், அதில் நானும், தனசேகர் என்பவரும் கையொப்பம் செய்தோம் என்றும், மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 12.00 மணியளவில் எங்கள் முன்னிலையில் எதிரி கரிமருந்து துகள் 50 கிராம், இரும்பு தள்ளுவண்டி ஒன்று மற்றும் 5 கிலோ எடையுள்ள தீப்பெட்டி, மருந்துடன் கூடிய தீக்குச்சிகள் ஆகியவற்றை அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றினார் என்றும், அதில் நானும், தனசேகர் என்பவரும் கையொப்பம் செய்தோம் என்றும், அது குறித்து காவல் ஆய்வாளர் விசாரணையில் சொல்லிவிட்டும், தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை – **இல்லை.**

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----

**IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, VIRUDHUNAGAR**

Sessions .. .. Sessions Case No. 103 of 2021

Deposition of witness for { Prosecution PW5
Defence
Court

Name : ராமநாதன்
Father Name :ராஜீ
Village **:கே.உ.சிலம்பட்டியில்**
Taluk :விருதுநகர்
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 09th day of March 2026.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை -**

1) நான் தற்போது கே.உ.சிலம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் தற்போது மார்டர்ன் தீப்பெட்டி ஆலையில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். 04.01.2013 ம் தேதி அம்மன் தீப்பெட்டி ஆலையில் நான் பணியில் இருந்த போது பஜார் காவலர் அங்கு வந்து என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். அதில் நானும், சரவணக்குமார் என்பவரும் கையொப்பம் செய்தோம். பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது ஆகும். பார்வை மகசரில் உள்ள என் கையெழுத்து மட்டும் **அ.த.சா.ஆ.2** ஆகும். போலிசார் என்னை விசாரித்தனர்.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கோரி பிறழ் சாட்சியாக விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பு குறுக்கு விசாரணை )**

2) கடந்த 04.01.2013 ம் தேதி மாலை 7.00 மணிக்கு நானும், சரவணக்குமார் என்பவரும் அம்மன் தீப்பெட்டி ஆலையில் வேலை பார்க்கும் போது அங்கு வந்த பஜார் காவல் ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதில் நானும், சரவணக்குமார்

என்பவரும் கையெழுத்து  செய்தோம் என்றும், சம்பவத்தின் போது ஆஜர் எதிரி வேலை செய்த தீப்பெட்டி ஆலையில் நாங்களும் வேலை பார்த்தால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –**

**3)** நான் கையெழுத்து செய்த பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----

**IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, VIRUDHUNAGAR**

Sessions .. .. Sessions Case No. 103 of 2021

Deposition of witness for { Prosecution PW4
Defence
Court

Name : தர்மராஜ்
Father Name : சுப்பையா
Village :இனாம்ரெட்டியபட்டி
Taluk :விருதுநகர்
Caste :
Calling :
Religion :
Age :47

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 09th day of March 2026.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை -**

1) நான் தற்போது இனாம்ரெட்டியபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் பால் வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரி மற்றும் இறந்து போன மாரியப்பனை எனக்கு தெரியும். கடந்த 03.01.2013 ம் தேதி அம்மன் தீப்பெட்டி ஆலையில் வேலை பார்த்து வந்தேன். அன்றைய தினம் மாலை 5.30 மணியளவில் டமார் என்று சத்தம் கேட்டது. அங்கு வேலை பார்த்த மாரியப்பனுக்கு தீக்காயம் ஏற்பட்டது. காயம்பட்ட மாரியப்பன் என்பவர் சிகிச்சைக்காக ஆம்புலன்ஸ்–ல் அழைத்து செல்லப்பட்டதாக சொன்னார்கள். காயம்பட்ட மாரியப்பன் மறுநாள் சிகிச்சை பலன் இன்றி இறந்துவிட்டார். மேற்படி தீ விபத்திற்கு யார் காரணம் என்று எனக்கு தெரியாது. விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கோரி பிறழ் சாட்சியாக விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பு குறுக்கு விசாரணை )**

2) கடந்த 03.01.2013 ம் தேதி மாலை 5.30 மணியளவில் கரிமருந்து துகள்கள் உடைய கழிவுகளை சுத்தம் செய்யாமல் அந்த கழிவுகளின் மீது

தீப்பெட்டி தீக்குச்சிகளின் சாக்குமூட்டைகளை வைத்து யாராவது இழுத்து தூக்கினால் தீ விபத்து ஏற்படும் என்று தெரிந்தே யாரும் செத்தா சாகட்டும் என்று வேண்டும் என்றே ஆஜர் எதிரி கடமையை செய்யாமல் இருந்ததால் தீ விபத்து ஏற்பட்டு, மாரியப்பன் என்பவருக்கு உடல் முழுவதும் தீக்காயம் ஏற்பட்டு இறந்துவிட்டதாக கேள்விபட்டுவிட்டு, போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டும், தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> – இல்லை**

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----

**IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, VIRUDHUNAGAR**

Sessions .. .. Sessions Case No. 103 of 2021

Deposition of witness for { Prosecution PW3
Defence
Court

Name : முத்து மகேந்திரன்
Father Name : முத்து மாரியப்பன்
Village :கே.கே.எஸ்.எஸ்.நகர்
Taluk :விருதுநகர்
Caste :
Calling :
Religion :
Age :33

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 09th day of March 2026.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை -**

1) நான் தற்போது கே.கே.எஸ்.எஸ்.என்.நகரில் குடியிருந்து வருகிறேன். நான் பாவாலியில் மார்டன் தீப்பெட்டி ஆலையில் வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 03.01.2013 ம் தேதி அம்மன் தீப்பெட்டி ஆலையில் வேலை பார்த்து வந்தேன். அன்றைய தினம் மாலை 5.30 மணியளவில் டமார் என்று சத்தம் கேட்டது. அங்கு வேலை பார்த்த மாரியப்பனுக்கு தீக்காயம் ஏற்பட்டது. காயம்பட்ட மாரியப்பன் என்பவர் சிகிச்சைக்காக ஆம்புலன்ஸ்–ல் அழைத்து செல்லப்பட்டார். காயம்பட்ட மாரியப்பன் மறுநாள் சிகிச்சை பலன் இன்றி இறந்துவிட்டார். மேற்படி தீ விபத்திற்கு யார் காரணம் என்று எனக்கு தெரியாது. போலிசார் முகவரி என்னிடம் கேட்டார்கள், முகவரி கொடுத்தேன். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கோரி பிறழ் சாட்சியாக விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பு குறுக்கு விசாரணை )**

2) கடந்த 03.01.2013 ம் தேதி மாரியப்பன் அம்மன் தீப்பெட்டி ஆலையில்

வேலை பார்த்து வந்ததாகவும், மேற்படி ஆலையில் தீப்பெட்டி குச்சியில் உள்ள கழிவு தீப்பெட்டி குச்சிகளை சாக்குபையில் வைத்து தள்ளுவண்டியில் எடுத்து சென்று பார்லரில் போட்டு எரிப்பது அங்கு வேலை பார்த்த மாரியப்பனின் அன்றாட வேலை என்றும், தீக்குச்சி கழிவு மருந்து துகள்கள் அதிகமாக அதில் படிந்து இருந்ததாகவும், அதன் மேலே உள்ள தீக்குச்சி தீப்பெட்டிகளை இழுத்தால் தீ விபத்து ஏற்படும் என்று ஆஜர் எதிரிக்கு நன்கு தெரிந்து இருந்தும், எவனாவது செத்து ஒழியட்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தீக்குச்சி கரி மருந்து கழிவுகளை அப்புறப்படுத்தாமல் இருந்ததால் மேற்படி தீ விபத்து ஏற்பட்டதாகவும், மேற்படி தீ விபத்து ஆஜர் எதிரி முழு பொறுப்பு என்றும், மேற்படி விபத்தினால் மாரியப்பனுக்கு உடல் முழுவதும் தீக்காயம் ஏற்பட்டது என்றும், மறுநாள் 1.15 மணியளவில் மாரியப்பன் இறந்துவிட்டதாகவும், தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> – இல்லை**

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
**IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, VIRUDHUNAGAR**

Sessions .. .. Sessions Case No. 103 of 2021

Deposition of witness for { Prosecution PW2
Defence
Court

Name : ரணவேல்
Father Name : பால்சாமி
Village :செந்நெல்குடி
Taluk :விருதுநகர்
Caste :
Calling :
Religion :
Age :56

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 09th day of March 2026.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை -**

1) நான் தற்போது செந்நெல்குடியில் குடியிருந்து வருகிறேன். நான் அம்மன் தீப்பெட்டி ஆலையில் கணக்கு பிள்ளையாக வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 03.01.2013 ம் தேதி மாலை 5.30 மணியளவில் டமார் என்று சத்தம் கேட்டது. அப்போது அங்கு வேலை பார்த்த மாரியப்பன் என்பவருக்கு தீக்காயம் ஏற்பட்டது. மேற்படி தீ விபத்திற்கு யார் காரணம் என்று எனக்கு தெரியாது, எவ்வாறு தீ விபத்து ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கோரி பிறழ் சாட்சியாக விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பு குறுக்கு விசாரணை )**

2) கடந்த 03.01.2013 ம் தேதி மாரியப்பன் அம்மன் தீப்பெட்டி ஆலையில் வேலை பார்த்து வந்ததாகவும், மேற்படி ஆலையில் தீப்பெட்டி குச்சியில் உள்ள கழிவு தீப்பெட்டி குச்சிகளை சாக்குபையில் வைத்து தள்ளுவண்டியில் எடுத்து சென்று பார்லரில் போட்டு எரிப்பது அங்கு வேலை பார்த்த மாரியப்பனின் அன்றாட வேலை என்றும், தீக்குச்சி கழிவு மருந்து துகள்கள் அதிகமாக அதில்

படிந்து இருந்ததாகவும், அதன் மேலே உள்ள தீக்குச்சி தீப்பெட்டிகளை இழுத்தால் தீ விபத்து ஏற்படும் என்று ஆஜர் எதிரிக்கு நன்கு தெரிந்து இருந்தும், எவனாவது செத்து ஒழியட்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தீக்குச்சி கரி மருந்து கழிவுகளை அப்புறப்படுத்தாமல் இருந்ததால் மேற்படி தீ விபத்து ஏற்பட்டதாகவும், மேற்படி தீ விபத்து ஆஜர் எதிரி முழு பொறுப்பு என்றும், மேற்படி விபத்தினால் மாரியப்பனுக்கு உடல் முழுவதும் தீக்காயம் ஏற்பட்டது என்றும், மறுநாள் 1.15 மணியளவில் மாரியப்பன் இறந்துவிட்டதாகவும், தற்போதும் நான் அதே தீப்பெட்டி ஆலையில் கணக்கு பிள்ளையாக வேலை பார்த்து வருவதால் எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை**

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----

**IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, VIRUDHUNAGAR**

Sessions .. .. Sessions Case No. 103 of 2021

Deposition of witness for { Prosecution PW1
Defence
Court

Name : பார்வதி
Hsband Name : மாரியப்பன்
Village :பாத்திமா நகர்
Taluk :விருதுநகர்
Caste :
Calling :
Religion :
Age :60

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 09th day of March 2026.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை -**

1) நான் தற்போது பாத்திமா நகரில் குடியிருந்து வருகிறேன். நான் ஹோட்டலில் வேலை பார்த்து வருகிறேன். எனது கணவர் மாரியப்பன் அம்மன் தீப்பெட்டி ஆலையில் வேலை பார்த்து வந்தார். கடந்த 03.01.2013 ம் தேதி இரவு 7.00 மணிக்கு எனது கணவர் அம்மன் தீப்பெட்டி ஆலையில் வேலை பார்த்து வரும் போது தீ விபத்து ஏற்பட்டு, மதுரை கென்னட் மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்து இருப்பதாக கிடைத்த தகவலின் பேரில் நான் அங்கு சென்று எனது கணவரை பார்த்தேன். அவர் பேசும் நிலையில் இல்லை. எனது கணவர் இறந்ததற்கு அம்மன் தீப்பெட்டி ஆலையின் உரிமையாளர் இழப்பீடாக ரூ.2 லட்சம் கொடுத்தார். மேற்படி தீ விபத்து யாரால் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ.1** ஆகும். புகார்மனுவில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கோரி பிறழ் சாட்சியாக விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பு குறுக்கு விசாரணை )**

2) கடந்த 03.01.2013 ம் தேதி எனது கணவர் மாரியப்பன் அம்மன் தீப்பெட்டி ஆலையில் வேலை பார்த்து வந்ததாகவும், மேற்படி ஆலையில் தீப்பெட்டி குச்சியில் உள்ள கழிவு தீப்பெட்டி குச்சிகளை சாக்குபையில் வைத்து தள்ளுவண்டியில் எடுத்து சென்று பார்லரில் போட்டு எரிப்பது எனது கணவரின் அன்றாட வேலை என்றும், தீக்குச்சி கழிவு மருந்து துகள்கள் அதிகமாக அதில் படிந்து இருந்ததாகவும், அதன் மேலே உள்ள தீக்குச்சி தீப்பெட்டிகளை இழுத்தால் தீ விபத்து ஏற்படும் என்று ஆஜர் எதிரிக்கு நன்கு தெரிந்து இருந்தும், எவனாவது செத்து ஒழியட்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தீக்குச்சி கரி மருந்து கழிவுகளை அப்புறப்படுத்தாமல் இருந்ததால் மேற்படி தீ விபத்து ஏற்பட்டதாகவும், மேற்படி தீ விபத்து ஆஜர் எதிரி முழு பொறுப்பு என்றும், மேற்படி விபத்தினால் எனது கணவர் மாரியப்பனுக்கு உடல் முழுவதும் தீக்காயம் ஏற்பட்டது என்றும், சுய நினைவோடு எனது கணவர் என்னிடம் சொல்லி வருத்தப்பட்டார் என்றும், தனது பிள்ளைகளை நல்லபடியாக பார்த்து கொள் என்று சொன்னார் என்றும், மறுநாள் 1.15 மணியளவில் எனது கணவர் இறந்துவிட்டதாகவும், மேற்படி கணவர் சொன்ன விபரத்தை நான் மதன கோபால் என்பவரை பஜார் காவல்நிலையம் அழைத்து சென்று எனது கணவர் சம்பவம் பற்றி என்னிடம் சொன்ன விபரத்தை நான் சொல்ல சொல்ல மதனகோபால் புகார் மனு எழுதினார் என்றும், மேற்படி புகார் மனுவில் நான் கையெழுத்து செய்துவிட்டு, எதிரி மீது நடவடிக்கைக எடுக்க புகார் மனு கொடுத்துவிட்டு, தற்போது எதிரியிடம் இழப்பீடு பெற்றுக்கொண்டதால் எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> –

3) எனது கணவரின் இறப்பிற்கு தீப்பெட்டி ஆலையின் உரிமையாளர் மனிதாபிமான அடிப்படையில் ரூ.2 லட்சம் இழப்பீடாக கொடுத்தார் என்றால் சரிதான்.